**ADM COURT, SANKARANKOVIL**

**தேதி 14.11.2025**

**CC. 255/2024**

**அ.சா. 1 மீண்டும் ஆஜர் சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் முதல்விசாரணையில் கூறிய விபரங்களைத்தான் போலீசார் விசாரணையிலும் கூறினேன் என்றால் சரிதான். நான் தற்போது எங்கு குடியிருந்து வருகிறேன் என்றால் நாலுவாசன்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். நான் என்ன வேலை செய்து வருகிறேன் என்றால் கூலிவேலை செய்து வருகிறேன். எனக்கு எத்தனை குழந்தைகள் என்றால் இரண்டு குழந்தைகள். அவர்கள் பெயர் காவ்யா மற்றும் கலையரசன். அ.சா.2 கலையரசன் எனது மகன் என்றால் சரிதான். 5வது எதிரியின் பெயர் என்னவென்றால் ஜெகதீசன். 5ம் எதிரி எனக்கு எவ்வகையில் உறவினர் என்றால் தற்போது எனது மகளின் கணவர். எனது மகளுக்கு எப்போது திருமணம் நடந்தது என்றால் 2014ம் வருடம் ஜுலை மாதம் திருமணம் நடைபெற்றது. 5ம் எதிரிக்கும், எனது மகளுக்கும் இடையில் இருந்த பழக்கம் காரணமாகத்தான் எங்களுக்கும், எதிரிகளுக்கும் இடையில் பிரச்சனை இருந்தது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதிக்கு எத்தனை வருடங்களுக்கு முன்பிலிருந்து 5ம் எதிரிக்கும், எனது மகளுக்கும் பழக்கம் உள்ளது என்றால் சுமார் 1 வருடகாலமாக பழக்கம் இருந்தது. எனது மகளுக்கும், 5ம் எதிரிக்கும் பழக்கம் ஏற்படுவதற்கு முன்பு நாங்களும், எதிரிகளும் நன்றாக பேசிவந்தோம் எ ன்றால் சரிதான். 5ம் எதிரி என் மகளிடம் பேசுவதை யார் கூறியும் நிறுத்தவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதிக்கு முன்பு 5ம் எதிரிக்கு எதிராக புகார் எதுவும் அளித்தேனா என்றால் காவல்நிலையத்தில் புகார் எதுவும் அளிக்கவில்லை. எங்களது சொந்தக்காரர்களான சரஸ்வதி, கருப்பையா ஆகியோர்கள் முன்னிலையில் வைத்து 5ம் எதிரியிடம் பேசினோம். 5ம் எதிரியும், எனது மகளும் காதலித்து

வந்தனர் என்றாலும், அவர்களை பிரிக்கமுடியவில்லை என்றாலும், அதனால் தற்போது அவர்கள் திருமணம் செய்துகொண்டனர் என்றாலும் சரிதான். திருமணம் நடைபெற்றபோது எனது மகளுக்கு என்ன வயது என்றால் சுமார் 16 வயது இருக்கும். திருமணம் நடைபெற்றபோது எதிரிகளுக்கு எதிராக குருவிகுளம் காவல்நிலையத்தில் புகார் அளித்தேனா என்றால் இல்லை. சங்கரன்கோவில் அரசு மருத்துவமனைக்கு நான் சிகிச்சைக்கு சென்றபோது எனது கணவர் என்னுடன் வந்து என்னை சிகிச்சைக்கு சேர்த்துவிட்டார் என்றால் சரிதான். எனது கணவரது அ.சா.ஆ.6 காயச்சான்றிதழில் அவரது மனைவியாக நான் அவருடன் மருத்துவமனைக்கு சென்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி காயச்சான்றிதழ்களில் சம்பவம் தொடர்பாக நாங்கள் காவல்துறைக்கு தெரிவித்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது வீடு கள்ளிகுளம் செல்லும் ரோட்டிற்கு மேற்குபுறத்தில் உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டிற்கு அடுத்த வீடு எதிரிகளின் வீடு என்றால் சரிதான். மேற்படி இரு வீடுகளுக்கும் இடையில் 30 மீட்டர் இடைவெளி இருக்கும் என்றால் சரிதான். நாங்கள் தற்போது குடியிருக்கும் வீடு அரசு வழங்கிய காலனி வீடு என்றால் சரிதான். எங்கள் வீட்டு வாசலும், எதிரிகளின் வீட்டு வாசலும் ரோட்டை பார்த்து உள்ளன என்றால் சரிதான். எங்கள் வீட்டிற்கு காம்பவுண்ட் சுவர்கட்டுவதற்கு செங்கல் அடுக்கி வைத்துள்ளோம் என்றால் சரிதான். நான் அளித்த புகாரில் எனது கணவரை இருநபர்கள் அடித்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரம் இரவு 8 மணி இருக்கும் என்றால் சரிதான். எனது வீட்டிற்கு தெற்குபக்கத்தில் காலியிடம் உள்ளது என்றால் சரிதான். எங்கள் வீட்டிற்கு அருகாமையில் வேறு வீடுகள் இல்லை என்றால் சரிதான். சம்பவம் பற்றி எனக்கும், எனது கணவருக்கும், எனது மகனுக்கும்தான் தெரியும் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் எனது மகன் என்ன வகுப்பு படித்துக் கொண்டிருந்தான் என்றால் 7 ம் வகுப்பு படித்துக்

கொண்டிருந்தான். சம்பவம் நடந்த சமயத்தில் எனது மகன் வீட்டிற்குள் படித்துக் கொண்டிருந்தார் என்றால் சரிதான். எனதுமகன் சின்னப்பையன் என்பதால் நான் கூறியதை நீதிமன்றத்தில் முதல்விசாரணையாக தெரிவித்துவிட்டார் என்றால் சரியல்ல. எனது கணவர் என்னுடன் சேர்ந்து வாழவில்லை என்றால் சரிதான். எனது மகளும் அவரது கணவருடன் சேர்ந்து வாழவில்லை என்றால் சரிதான். எனது மகளுக்கு எத்தனை குழந்தைகள் என்றால் 2 குழந்தைகள். அந்த குழந்தைகள் தற்போது யாரிடம் உள்ளன என்றால் அவருடைய மாமியாரிடம் உள்ளது. தற்போது எனது மகள் எங்கு வசித்து வருகிறார் என்றால் திருநெல்வேலியில் வசித்து வருகிறார். எனது மகள் அவரது கணவருடன் சேர்ந்து வாழவில்லை என காவல்நிலையத்தில் எழுதிக்கொடுத்தாரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னுடைய தூண்டுதலின்பேரில் எனது மகளுக்கும்,5ம் எதிரிக்கும் இடையில் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனது கணவருக்கு எனது மகள் மற்றும் 5ம் எதிரிக்கு இடையில்திருமணம் நடைபெற்றதில் விருப்பம் இல்லை என்றால் முதலில் எனது கணவருக்கு விருப்பம் இல்லை. தற்போது எனது கணவர் 5ம் எதிரியுடன் வசித்து வருகிறார். எனது கணவர்தான் எனது மகள் மற்றும் 5ம் எதிரியை சேர்ந்து வாழவிடாமல் பிரச்சனை செய்து வருகிறார். எனது கணவர் நீதிமன்ற முதல்விசாரணையில் வாக்குவாதம் ஏற்பட்டபோது நானும் அவரும் நிலைதடுமாறி கீழே விழுந்துவிட்டதாக கூறியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரிகளுக்கும் எங்களுக்கும் இடையில் பலமுறை பிரச்சனை ஏற்பட்டதால் நாங்கள் எதிரிகளுக்கு எதிராக காவல்நிலையத்தில் பலமுறை புகார் அளித்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் முதல்விசாரணையில் கூறியவாறு எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது வீட்டைச்சுற்றி எந்த தெருவிளக்கும் இல்லை என்றால் எனது வீட்டிற்கு எதிரில் உள்ள ரோட்டில் தெருவிளக்கு

உள்ளது. எனது ரத்தம் படிந்த சேலையை காவல்நிலையத்தில் கொடுத்தேனா என்றால் இல்லை. எதிரிகளை பழிவாங்கும் நோக்கத்தோடு பொய்யாக புகார் மனு அளித்தேன் என்றாலும், வழக்கிற்கும், எதிரிகளுக்கும் சம்பந்தம் இல்லை என்றாலுல் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

**<u>ADM COURT, SANKARANKOVIL</u>**

**தேதி 14.11.2025**

**CC. 255/2024**

**<u>அ.சா.2 (கலையரசன்) மீண்டும் ஆஜர் சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் முதல்விசாரணையில் கூறிய விபரங்களைத்தான் போலீசார் விசாரணையிலும் கூறினேன் என்றால் சரிதான். எதிரிகளும் நாங்களும் உறவினர்கள் என்றால் சரிதான். 5ம் எதிரி எனது சகோதரியை திருமணம் செய்துள்ளார் என்றால் சரிதான். எனக்கு எனது அக்காவை பிடிக்கும் என்றால் சரிதான். சம்பவம் நடந்த சமயத்தில் நான் 5ம் எதிரியுடன் பேசிக்கொள்வேன் என்றால் சரிதான். என் மூலமாகத்தான் எனது சகோதரிக்கும், 5ம் எதிரிக்கும் பழக்கம் ஏற்பட்டது என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் எனக்கு 11 வயது என்றால் சரிதான். சம்பவம் நடந்த சமயத்தில் எனக்கு நல்லது கெட்டது பிரித்து பார்க்க தெரியுமா என்றால் அந்த சமயத்தில் எதோ பிரச்சனை நடக்கிறது என்று தெரியும். சம்பவம் நடந்த சமயத்தில் நான் வீட்டிற்குள் படித்துக் கொண்டிருந்தேனா என்றால் இல்லை. வீட்டிற்குள் விளையாடிக் கொண்டிருந்தேன். அப்போது மலர் ஆட்டோவில் எனது அம்மா சங்கரன்கோவிலுக்கு வந்தார் என்றால் சரிதான். அதன்பிறகுதான் சம்பவம் பற்றி நான் அருகில் கேட்டுத்தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. சம்பவம் நடைபெற்றபோது நான் வீட்டிற்குள் இருந்தேன். சத்தம் கேட்டு வெளியே வந்தேன். எனது அக்கா பிள்ளைகளுடன் நான் தற்போதும் பேசிக்கொள்வேன் என்றால் சரிதான். நான் எனது நீதிமன்ற முதல் விசாரணையில் பெரியவர்கள் சொல்லிக்கொடுத்தவாறு கூறிவிட்டேன் என்றால் சரியல்ல. நான் முதல்விசாரணையில் கூறியவாறு எந்த

சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், நான் பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது அக்கா மற்றும் 5ம் எதிரிக்கு இடையில்இருந்த பிரச்சனை தொடர்பாக எனது பெற்றோர்கள் பலமுறை காவல்நிலைத்தில் புகார் அளித்தார்கள் என்றால் சரிதான். எதிரிகளை பழிவாங்கும் நோக்கத்தோடு இவ்வழக்கு பொய்யாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**